1987 ஏப்ரல் 8]

தேயிலையைச் சிவில் சப்ளைஸ் நிறுவனம் வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி ஆலோசிக்கலாம். ஆனால் இப்போது தேக்க நிலை என்று சொன்னால், விற்காமல் இல்லை. உற்பத்தி செய்யப்படுகின்ற அத்தனை தேயிலையும் விற்கப்பட்டு விடுகிறது. ஆனால் விலை மட்டும் குறைவாக இருக்கிறது. அதைத் தான் இங்கே சொல்கிறார்கள். சிவில் சப்ளைஸில் நாம் தருகிற போது அன்றைக்கு மார்க்கெட்டிலே விலை எப்படி இருக்கிறதோ அந்தக் கொடுத்துத்தான் வாங்குகிறோம். எனவே அப்படி பார்க்கிறபோது, இங்கே வாங்குவதும், அங்கே வாங்குவதும் ஒன்றாகத்தான் இருக்கும். விற்பனை தேங்கி விடவில்லை. விலை குறைவாக இருக்கிறது. எனவே நாமே நேரடியாக வாங்கினாலும் கூட விலையை நிச்சயமாக கூட்டிக் கொடுக்கக்கூடிய நிலையில் சிவில் சப்ளைஸ் இருக்காது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். எனவே விற்பனையிலே ஏதாவது சிரமம் இருந்து, உற்பத்தியான பொருள் வெளியிலே விற்கமுடியாத நிலை இருக்குமேயானால் இந்த அரசும் அதற்கு சித்தமாக இருக்கிறது. தற்போது எல்லாம் விற்பனையாகிக் கொண்டிருக்கிற காரணத்தால் அதிலே அவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்படாது என்று கருதுகிறேன்.

நெடுகுளா கிராமத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை.

343—(* வினா எண் 11881) திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுகுளா கிராமப் பகுதியில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நெடுகுளா கிராமப்பகுதியில் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை துவங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, அந்தப் பகுதியில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைக்கின்ற எண்ணம் தற்போது இல்லை என்று குறிப் பிட்டார்கள். அந்தப் பகுதியில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் பரப்பளவில் சிறு விவசாயிகள் தேயிலையைப் பயிரிட்டு இருக்கிறார்கள். ஆகையால் அந்தப் பகுதிக்கு நடப்பு ஆண்டிலாவது கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோத்தகிரி கூட்டுறவுத் தொழிற்சாலையில் 39 லட்சம் டன் தேயிலை ஒரு ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்குத் தேவையான தேயிலை இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதற்குமேலே நிச்சயமாக கிடைக்காது என்று அங்கேயிருந்து தகவல் சொல்லி யிருக்கிறார்கள். எனவே, தனியாக ஒரு தேயிலைத் தொழிற்சாலை ஆரம்பிப்பது என்பது அவசியமில்லாத ஒன்று என்றுதான் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை மீண்டும் ஒரு முறை பரிசீலித்துப் பார்த்து, சொல்லலாம்.

**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பு தவறான குறிப்பு என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதி, குறைந்தபட்சம் 3 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட ஒரு பகுதியாகும். அங்கே

1987 ஏப்ரல் 8]

தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் இரண்டு இருக்கின்றன. ஆகையால் கண்டிப்பாக இந்த ஆண்டு அந்தப் பகுதிக்கு ஒரு தேயிலைத் தொழிற்சாலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தனியார் மூலமாக அங்கே தொழிற்சாலை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். ஒருவேளை தனியார் மட்டுமே வைத்திருக்கிற காரணத்தாலே, விலையிலே மிகவும் குறைத்து வாங்குகிறார்கள்; விவசாயிகளுக்கு சரியான விலை கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு, குறைபாடு இருக்குமேயானால் அதைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது கூட சரியாக இருக்கும். ஆனால் தனியார்கள் முறையாக அதைச் செய்து கொண்டு இருந்தால் அந்த இடத்தில் அரசின் சார்பாக ஒன்றை ஏற்படுத்துவது ஒரு தேவையில்லாத போட்டியை ஏற்படுத்துவது என்பது அரசுக்கும் நல்லது அல்ல, அவர்களுக்கும் நல்லது அல்ல. அவர்கள் தவறு செய்வார்களானால், அவர்கள் சரியான விலை கொடுக்காமல் இருப்பார்களானால், அதை அரசின் கவனத்திற்கு முறையாகத் தெரிவிப்பார்களானால், அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து முறைப்படுத்தி, அது நல்ல முறையில் நடப்பதற்கு உண்டான முயற்சியை நாம் மேற்கொள்ளலாம்.

(முற்பகல் 10-50)

பால் சோதனையிடல்.

344—(* வினா எண். 4268) திரு. க. வெ. வீராசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் சோதனையிடும் அதிகாரத்தினை சுகாதார ஆய்வாளர்களிடம் உள்ளதுபோல், கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) மடி நோயிலிருந்து பரவும் நோய்களிலிருந்து பாது காக்க இவ்வித ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?